## வீதி அபிவிருத்தி அதிகாரசபை – 2016

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதிநிலைமைக் கூற்று, நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

### 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 1 - நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

(i) நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் போது ஒப்பந்ததாரர்களின் பற்றுச்சீட்டுக்களிலிருந்து அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் நடைமுறைச் சொத்துக்களாக குறிப்பிடப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது கிராமிய பால நிர்மாண பிரிவு, செலுத்துகை பிரிவுகள் மற்றும் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களுக்கு அளிக்கப்பட்ட ரூபா 42,608,398 வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் அந்த வேலை ஆரம்பிப்பு முற்பணங்களின் தீர்ப்பனவு காலப்பகுதியினைக் கருத்திற்கொள்ளாது நடைமுறையல்லாச் சொத்துக்களாக கருதப்பட்டிருந்தது.

(ii) அதிகாரசபை முழுமையாக உரிமையைக்கொண்டிருந்த துணைக்கம்பனிகளான வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண உபகரண (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனி, வரையறுக்கப்பட்ட எமியுல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட அதிவேக போக்குவரத்து (தனியார்) கம்பனியின் கணக்காய்வு நிதிக்கூற்றுக்களினை கணக்குகளுக்கு எடுத்த பின்னர் 2016 ஆம் ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களினை தயாரிப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கையொன்றினை எடுத்திருக்கவில்லை.

(iii) தீர்ப்பனவுகளுக்கான நிலுவைத் திகதிகளினை இனங்கண்டிராது ரூபா 2,664,571,296 மற்றும் ரூபா 966,359,992 தொகையான பிடிகாசு முறையே நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிராத ரூபா 24.5 மில்லியன் பெறுமதியுடைய கட்டிடமொன்றிற்கு ரூபா 1.2 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு வழங்கப்பட்டிருந்தது. அதிகாரசபையின் தலைமை அலுவலக கட்டிடத்தில் காணப்படும் மொத்த இடைவெளியில்கூட ரூபா 496.5 மில்லியன் பெறுமதியுடைய 72,400 சதுரஅடி பரப்பொன்று நிரந்தர அடிப்படையில் வரிசை அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றதுடன் அவற்றின் முழுமையான பெறுமானத்தேய்வு அதிகாரசபையின் பெறுமானத்தேய்வு செலவினங்களுக்கு மேலும் அறவிடப்பட்டிருந்தது. கட்டிடத்திற்கான மீளாய்வாண்டிற்காக விதிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு ரூபா 25 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

**(ஆ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வழுக்களில் மாற்றங்கள்**

உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளின் நிர்மாணத்திற்கு ஒப்பந்ததாரர்களினால் செலுத்தப்பட்ட தொகை பிற்போடப்பட்ட செலவினங்களாக கருதப்பட்டிருந்ததுடன், நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ்

கணக்கிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான கடனில் மூலதனப் பகுதியின் மீள்செலுத்துகைகள் பிற்போடப்பட்ட செலவினங்களுக்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான வருமானக் கூற்றிற்கு வரவுவைக்கப்பட்டது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் இந்த கணக்கீட்டு தகவல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

---

(i) சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு வருடத்தின் அறிக்கையிடல் திகதியிலேனும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 972 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தினை மீளாய்வு செய்வதற்கு எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், ரூபா 1,592 மில்லியன் கிரயத்தினையுடைய 410 வாகனங்கள் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு முழுமையாகத் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தினை மீள்மதிப்பிடுவதற்கு மற்றும் நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதற்கமைய அவற்றை கணக்கிட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வழமையாக, அதிகாரசபையின் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கைதவிர்ப்புத் திகதி வரைக்கும் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. அதிகாரசபையின் சொத்துக்கள் அவை கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தினை தொடர்ந்துவரும் மாதத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் கைதவிர்ப்பு மாதம் முழுவதற்கும் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. இது தொடர்பிலான வெளிப்படுத்தலொன்று நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த கணக்கீட்டு நடைமுறை இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்கியிருக்கவில்லை.

(iii) தேசிய நெடுஞ்சாலைகள் துறை செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 935.8 மில்லியன் பெறுமதியுடைய சொத்துக்கள் சொத்துக்களின் வகைப்படுத்தலின் பிரகாரம் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டிராது கட்டிடங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, கட்டிடங்கள் மீதான பெறுமானத்தேய்வு ரூபா 201 மில்லியனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், தெற்கு அதிவேக வீதி செயற்திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 5,309 மில்லியன் மூலதனமற்ற செலவினத்தின் மூலதனமயமாக்கல் காரணமாக அவற்றின் பெறுமானத்தேய்வு கூட ரூபா 159.7 மில்லியனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iv) ரூபா 881.8 மில்லியன் கிரயமுடைய 101 மோட்டார் வாகனங்கள் வரிசை அமைச்சு மற்றும் பல்வேறு செயற்திட்டங்களினால் பயன்படுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், அவற்றிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 154.6 மில்லியன் தொகை எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் - 01 மற்றும் 07 இற்கு முரணாக அதிகாரசபையின் வருமானத்திற்கு எதிராக அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பிற்போடப்பட்ட செலவினங்களுக்கு பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அரசினால் மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகளின் கீழ் வீதிகளின் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தலுக்கு ஏற்பட்ட செலவினம் மீண்டெழும் செலவினமொன்றாக இனங்காணப்பட்டிருந்த அதேவேளை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டங்களின் கீழ் வீதிகளின் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்தலுக்கு ஏற்பட்ட ரூபா 120,700 மில்லியன் தொகையான செலவினம் பிற்போடப்பட்ட செலவினமொன்றாக இனங்காணப்பட்டிருந்தது. சமமான செலவின வகைகளுக்கு பிரயோகிக்கப்பட்ட இரண்டு கணக்கீட்டு நடைமுறைகள் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாது காணப்பட்டது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக வீதிகளினை நிர்மாணித்துப் பராமரிப்பது அதிகாரசபையின் பிரதான தொழிற்பாடுகளாகக் காணப்பட்ட போதிலும், அதிகாரசபைக்குச் சொந்தமான 12,210 கிலோமீற்றர் நெடுஞ்சாலைகளின் நீளம் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் ஸ்தாபிப்பிலிருந்து அவற்றைப் பயன்படுத்துகின்ற அதிகாரசபைக்கு அளிக்கப்பட்டுக் காணப்படும் நாட்டின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள 1,026.54 ஏக்கர் மொத்தப் பரப்பளவுடனான காணிகள் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காததுடன் இது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பொன்றாகக்கூட வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 67.6 மில்லியன் பெறுமதியான 3 ஏக்கர்கள் மற்றும் 18 பேர்ச் ஒன்றுடனான மற்றுமொரு 4 காணிகள் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களினால் 2013 - 2015 வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 250.5 மில்லியன் பெறுமதியுடைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீளாய்வாண்டு வரையிலும் அதிகாரசபையின் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி அதே தொகையினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீதான பெறுமானத்தேய்வு கூட ரூபா 51.05 மில்லியனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) அதிவேக வீதிகளின் நிர்மாணம் மற்றும் வீதிகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் 04 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களினால் அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட ரூபா 467.2 மில்லியன் பெறுமதியுடைய சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 466.13 மில்லியன் வட்டி வருமானம் பெறப்பட்ட போதிலும், இது முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நகர்வில்லாத உதிரிப்பாகங்களின் மீது (Non-moving spare) ரூபா 32.14 மில்லியன் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சரியான ஏற்பாடு ரூபா 29.82 மில்லியன் தொகையாக மாத்திரம் காணப்பட்டது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பு மீதி ரூபா 2.32 மில்லியனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) அதிகாரசபைக்கு எதிராக ஊழியர்கள் மற்றும் வெளித்தரப்பினர்களால் தாக்கல்செய்யப்பட்ட 41 நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கான பொதுக் குறிப்புக்களின் கீழ் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிகழத்தக்க பொறுப்புக்களாக ரூபா 338,547,170 தொகையொன்று காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபைக்கு எதிராக ஊழியர்கள் மற்றும் வெளித்தரப்பினர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் உள்ளபடியான எண்ணிக்கை 170 என குறிப்பிடப்பட்டதுடன் 71 நீதிமன்ற வழக்குகளுக்கு ரூபா 550,413,600 தொகையான இழப்பீடு கோரப்பட்டிருந்தது.

(ஏ) கண்டி மற்றும் பொரல்ல சுரங்கப்பாதையில் அமைந்துள்ள 37 வியாபாரக் கடைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து கணக்காய்வினால் பெறப்பட்ட தகவலின் பிரகாரம், 1,754 மோட்டார் வாகனங்கள் அதிகாரசபையின் தலைவர் அல்லது பொது முகாமையாளரின் பெயர்களின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகாரசபையின் நிதிப் பிரிவினால் பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம், அதிகாரசபையினால் உரிமையைக் கொண்டுள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 1,486 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரின் கீழ் பதிவுசெய்யப்பட்ட 268 மோட்டார் வாகனங்கள் அதிகாரசபையின் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது. அதேவேளை, அதிகாரசபையின் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 205 வாகனங்கள் அதிகாரசபையின் பெயரின் கீழ் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், சில மோட்டார் வாகனங்கள் சொத்துக்கள் பதிவேட்டில் இரண்டு தடவை உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையினால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 3,796 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனங்களின் துல்லியத்தன்மையினை கணக்காய்வில் பதிலளிக்கமுடியாது காணப்பட்டது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள் மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும எமியுல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்தொடர் மீதிகளுக்கிடையே ரூபா 86.7 மில்லியன் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மோட்டார் வாகனங்களின் கிரயம் ரூபா 3,363 மில்லியன் தொகை அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் ''செயற்திட்டங்களின்'' கீழ் தனியாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பின்தொடர் பட்டியலின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான அவ்வாறான மோட்டார் வாகனங்களின் கிரயம் ரூபா 3,451 மில்லியன் தொகையாகக் காணப்பட்டமையினால், அந்த இரண்டு பதிவுகளுக்கிடையே ரூபா 88 மில்லியன் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதிநிலைமைக்கூற்றின் பிரகாரம், தேசிய நெடுஞ்சாலைகள் துறை செயற்திட்டத்தினால் அதிகாரசபைக்கு மாற்றப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,481 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், மேற்குறித்த செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொடர்புடைய மீதி ரூபா 2,506 மில்லியன் தொகையாகக் காணப்பட்டமையினால், ரூபா 25 மில்லியன் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தெற்கு அதிவேக வீதியின் மூலதனமாக்கப்பட்ட பெறுமதி ரூபா 116,357 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் தொடர்புடைய செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட குறித்த மீதி ரூபா 116,797 மில்லியன் தொகையாகக் காணப்பட்டமையினால், ரூபா 440 மில்லியன் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) உள்ளூர் வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் தொடர்பில் அதிகாரசபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு முறைமையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களின் தீர்ப்பனவு செய்யப்படாத மீதி அந்த திகதியில் உள்ளவாறு அவ்வாறான கடன்களினைப் பயன்படுத்துவதன் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கு சமமாகக் காணப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த இரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 149.7 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வகைகளுக்கும் எதிராக சுட்டிக்காட்டப்பட்டவாறு பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| | வகை | பெறுமதி<br>ரூபா.மில்லியன் | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| (அ) | இருப்பு வகைகள் (உபகரணங்கள், நேர் மற்றும் நேரில் மூலப்பொருட்கள், உதிரிப் பாகங்கள், எழுதுகருவிகள் மற்றும் அச்சிடல் வகைகள்) | 624 | விபரமான பட்டியல்கள் மற்றும் அலகு விலைகள் |
| (ஆ) | துணைக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள், பொறி மற்றும் உபகரணம். | வழங்கப்படவில்லை | சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| (இ) | வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் | 1,779 | ஒப்பந்தங்களின் விபரங்கள் |

### 2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

அரச அமைப்புக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து நிலுவையாகவுள்ளவற்றை அறவிடுவதற்கு அதிகாரசபை நேரத்திற்கு நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. அதேநேரம் வெளித்தரப்பினர்களுக்கு செலுத்தவேண்டியவற்றை தீர்ப்பனவுசெய்வதற்கு பலனளிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டியவைகளின் நீண்டகால நிலுவை மீதிகள் முறையே ரூபா 6,442,350,959 மற்றும் ரூபா 3,585,727,582 கூட்டுத்தொகையினைக் கொண்டிருந்தது. பின்வரும் அட்டவணையில் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

| | வகைகள் | தொகை<br>ரூபா | விபரம் | அறவிடப்படாத காலப்பகுதி<br>ஆண்டுகள் |
|---|---|---|---|---|
| (i) | கடன்பட்டோர்கள் | 1,248,930,524 | 12 கடன்பட்டோர் கணக்குகள் | 2012 தொடக்கம் 2015 வரை மற்றும் 1987 இல் இருந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | ஒப்பந்த முற்பணங்கள் | 16,032,089 | 10 ஒப்பந்ததாரர்கள் | 05 வருடங்களுக்கு மேலாக |
| (iii) | ஏனைய முற்பணங்கள் | 3,740,000,000 | உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 02 வருடங்களுக்கு மேலாக |
| (iv) | வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் | 1,373,360,371 | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை - மேல் மாகாணம் மற்றும் 20 ஒப்பந்ததாரர்கள் | 03 தொடக்கம் 04 வருடங்கள் மற்றும் 05 வருடங்களுக்கும் மேலாக |
| (v) | கொள்வனவு முற்பணங்கள் | 45,541,431 | 81 விநியோகஸ்தர்கள் | 01 தொடக்கம் 02 வருடங்கள், 03 தொடக்கம் 04 வருடங்கள் மற்றும் 05 வருடங்களுக்கும் மேலாக |
| (vi) | பெறவேண்டிய வாடகை | 2,608,952 | பொரல்ல மற்றும் கண்டியிலுள்ள 07 சுரங்க கடை உரிமையாளர்கள் | 02 தொடக்கம் 04 வருடங்கள் மற்றும் 09 வருடங்களுக்கும் மேலாக |
| (vii) | கணக்கு மீதான முற்பணங்கள் | 15,877,592 | வரையறுக்கப்பட்ட மகநெகும ரேட் கொன்ஸ்ரக்ஸன் என்ட் இகியூப்மென் (தனியார்) கம்பனி | 03 தொடக்கம் 04 வருடங்கள். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

| | வகைகள் | விபரம் | தொகை | தீர்ப்பனவுசெய்யப்படாத காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா. | ஆண்டுகள் |
| (i) | வாடிக்கையாளர் வைப்புக்கள் | 148 வாடிக்கையாளர் வேலைகள் | 205,588,213 | 03 தொடக்கம் 05 வரையான ஆண்டுகள் மற்றும் 5 வருடங்களுக்கு மேலாக |
| (ii) | தாமதக்கட்டண நட்டங்கள் | 344 ஒப்பந்ததாரர்கள் | 428,064,589 | 01 தொடக்கம் 05 வரையான ஆண்டுகள் மற்றும் 05 வருடங்களுக்கு மேலாக |
| (iii) | பாதுகாப்பு வைப்புக்கள் | 109 ஒப்பந்ததாரர்கள் | 2,228,159 | 30 வருடங்களுக்கு மேலாக |
| (iv) | செலுத்தவேண்டிய பிடிகாசு | 1248 ஒப்பந்ததாரர்கள் | 2,949,846,621 | 01 தொடக்கம் 04 வரையான ஆண்டுகள் மற்றும் 05 வருடங்களுக்கு மேலாக |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசு அரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 135(4) | அதிகாரசபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர் அதிகாரசபைக் கொடுக்கல் வாங்கல்களின் அங்கீகாரமளித்தல், அனுமதியளித்தல் மற்றும் சான்றுறுதிப்படுத்தல் தொழிற்பாடுகளினை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 373 மற்றும் 2016 ஒக்தோபர் 05 இன் 346 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கை | ஆண்டின் போது அதிகாரசபையின் வடமாகாண பணிப்பாளர் அலுவலகத்திற்கு அளிக்கப்பட்ட ரூபா 1,331,623 கூட்டுத்தொகையான எரிபொருள் கட்டுநிதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 770 | வருடாந்த சொத்துக்களின் மெய்மையாய்வில் இனங்காணப்பட்டிருந்த சேவைக்குதவாத சொத்துக்கள் தொடர்பில் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டல் 2006 இன் 9.4 ஆம் வழிகாட்டல் | 2016 ஆம் ஆண்டிற்கு பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 9:4 ஆம் பிரிவு | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் ஏனைய 03 அமைச்சுக்களுக்கு அதிகாரசபையின் ஐம்பது ஆளணி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். |
| (ii) 9:3:1(viii) ஆம் பிரிவு | முகாமைத்துவ பதவிகளிலுள்ள வெற்றிடங்களினை நிரப்பும்பொருட்டு அதிகாரசபையினால் தொடர்ச்சியான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1994 யூன் 14 இன் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2016 யூலை தொடக்கம் 2017 மே வரையான காலப்பகுதிக்கு அதிகாரசபையின் ஆளணியினருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 86,159,000 தொழில்சார் படிகளின் செலுத்துகைகளுக்கு அமைச்சரவை மற்றும் பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,794.77 மில்லியன் வரிக்கு முன்னைய மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 531.11 மில்லியன் வரிக்கு முன்னைய மிகையொன்றினை விளைவித்திருந்தமையினால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 1,263.66 மில்லியன் பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது ரூபா 1,227.09 மில்லியனால் செலவினம் அதிகரித்தமை மற்றும் மொத்த வருமானம் ரூபா 36.57 மில்லியனால் குறைவடைந்தமை நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் படிகள், அரசுக்கு செலுத்தப்பட்ட வரிகள் மற்றும் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுக் கட்டணங்களினை கணக்கிற்கு எடுத்த பின்னர், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் பெறுமதி சேர்க்கை ரூபா 18,130 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 8.71 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சில முக்கிய மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரங்கள் | திசெம்பர் 31 இல் உள்ளபடியானது 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|
| இருப்புக்களில் குறைவு | 127,402,408 | 20,089,153 |
| கடன்பட்டோர்களில் அதிகரிப்பு | 461,097,831 | 909,964,628 |
| முற்செலுத்துகைகளில் குறைவு | 1,848,401 | 2,852,290 |
| வைப்புக்கள் மற்றும் முற்பணங்களில் குறைவு | 49,887,868 | 413,967,811 |
| ஆரம்பிப்பிற்கான முற்பணங்களில் குறைவு | 4,537,896,890 | 7,220,180,732 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் (அதிகரிப்பு) / குறைவு | 26,613,614 | (25,049,280) |
| ஏனைய முதலீடுகளில் (அதிகரிப்பு) | 2,530,125 | 2,318,687 |
| உள்ளூர் வங்கிக் கடன்களின் பிற்போடப்பட்ட செலவினங்களில் (அதிகரிப்பு) | 20,513,874,043 | 35,551,825,781 |
| ஏனைய கடன்களின் பிற்போடப்பட்ட செலவினங்களில் குறைவு | - | 4,851,436 |
| வாடிக்கையாளர் மற்றும் ஏனைய வைப்புக்களில் அதிகரிப்பு | 553,027,946 | 195,790,930 |
| செலுத்தவேண்டிய பிடிகாசில் குறைவு | 2,630,221,255 | 276,000,007 |
| ஒப்பந்ததாரர்க்கு செலுத்தவேண்டியவைகளில் (அதிகரிப்பு) / குறைவு | 2,573,246,728 | (2,920,360,509) |
| **தேறிய காசு உருவாக்கம்** | **(15,791,026,627)** | **(29,957,758,724)** |

மீளாய்வாண்டின் போது ரூபா 15,791,026,627 எதிர்மறை தொழிற்படு மூலதனத்தை அதிகாரசபை உருவாக்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 47 சதவீத முன்னேற்றமாகக் காணப்பட்டது.

### 3.2.2 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான அதிகாரசபையின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | 2015 |
|---|---|---|
| | சதவீதம் | சதவீதம் |
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 0.70 | 0.96 |
| விரைவுச் சொத்துக்கள் விகிதம் | 0.68 | 0.93 |

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான உள்ளூர் வங்கிக் கடன்கள் மீதான வட்டி மற்றும் மூலதன மீள்செலுத்துகைகள் ரூபா 5,961.14 மில்லியனால் அதிகரித்தமை மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் 32 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை மீளாய்வாண்டிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதத்தின் குறைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கூட்டிணைந்த திட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு முக்கிய செயலாற்றல் குறிகாட்டல்களுடன் ஒப்பிடப்பட்டு முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| செயற்பாடு | | முக்கிய செயலாற்றல் குறிகாட்டி | அலகு அளவிடை | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | இலக்கிடப் பட்டது | உள்ள படியானது | இலக்கிடப் பட்டது | உள்ள படியானது |
| (அ) | தேசிய நெடுஞ்சாலைகளின் பேணுகை | மணல் முத்திரையளிக்கப்பட்ட / மேற்பரப்பு உபசரிக்கப்பட்ட கிலோமீற்றர்களின் எண்ணிக்கை | கிலோ மீற்றர்கள் | 900 | 652 | 800 | 273 |
| (ஆ) | வலையமைப்பு (தேசிய நெடுஞ்சாலைகள்) | IRI>5.5 இணையுடைய வீதிகளின் சதவீதம் | | 60 | 38 | 46 | 46 |
| (இ) | அகலமாக்குதல் மற்றும் வீதிகளின் முன்னேற்றம் | தேசிய வீதி வலையமைப்பிலுள்ள 4 மற்றும் 6 ஒழுங்கை வீதிகளின் நீளம் | கிலோ மீற்றர்கள் | 191 | 209 | 225 | 203 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தேசிய வீதி வலையமைப்பிலுள்ள 2 ஒழுங்கை வீதிகளின் நீளம் | கிலோ மீற்றர்கள் | 6500 | 7000 | 7000 | 7000 |
| | | பூர்த்தியாக்கப்பட்ட அதிவேக வீதிகளின் நீளம் மற்றும் செயற்படுத்துகை | கிலோ மீற்றர்கள் | 170 | 170 | 170 | 170 |
| (ஈ) | அதிவேக வீதிகளின் நிர்மாணம் | அதிவேக வீதி வலையமைப்பின் சராசரிப் பயன்பாடு | நாளொன்றிற்கான வாகனங்களின் மில்லியன் கிலோமீற்றர் | 1.5 | 2.4 | 1.7 | 1.5 |

2016 ஆம் ஆண்டின் போது 46 சதவீத கடினமான மேற்பரப்புடனான வீதிகளின் எண்ணிக்கையினை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறான அவ்வாறான தரம் குறைக்கப்பட்டது தொடர்பிலான தகவல் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த செயலாற்றல் குறிகாட்டியினை மீளாய்வதற்கு தந்திரோபாயமொன்று காணப்பட்டிருந்த போதிலும், அவற்றின் மீதான தரவு உட்புகுத்தல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், 2016 ஆம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருந்ததா அல்லது இல்லையா என்பதை மீளாய்வு செய்வதற்கு அதிகாரசபையினால் முடியாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.1.1 தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பு வேலைகள்

---

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கு தேசிய வீதிகளின் பராமரிப்பிற்கான அரச ஏற்பாடுகள் ரூபா 4,000 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இந்த ஏற்பாடுகளில், ரூபா 2,497 மில்லியன் தொகையொன்று பெறப்பட்டதுடன் முழுத்தொகையும் முன்னைய ஆண்டுகளுக்கான செலுத்தவேண்டிய பட்டியல்களினை தீர்ப்பனவுசெய்வதற்கு மற்றும் மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட வேலைகளின் செலுத்துகைக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்குமேலாக, செய்யப்பட்ட வேலைகள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 1,783 தொகையொன்று செலுத்தவேண்டிக் காணப்படுகின்றது. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான மொத்த ஏற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் தேசிய வீதிகளின் பராமரிப்பிற்கு ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 280 மில்லியனால் மிகைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் வரம்பின் கீழ் காணப்படும் வீதிகளின் பராமரிப்பு தேசிய வீதிகளின் பராமரிப்பிற்கான ஏற்பாடுகளினைப் பயன்படுத்துவதன் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அந்த நிதியினைப் பயன்படுத்தி, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைக்கூட கொண்டிராது, ஆர்டீஏ அல்லாத வீதிகள் பராமரிப்பிற்கு ரூபா 232.92 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டது.

(இ) வீதிகளின் பராமரிப்பு செயற்பாடுகளுக்கு மகநெகும எமியுல்சன் கம்பனியிடமிருந்து 2004 ஆம் ஆண்டிலிருந்து 2017 மார்ச் வரை ரூபா 5,079.53 மில்லியன் பெறுமதியுடைய பூச்சுக்கள் (Emulsion) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு விலை அதிவேக விகிதங்களின் பட்டியல் (எச்எஸ்ஆர்) அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டல்களினைப் பின்பற்றியிராது பூச்சுக்களின் கொள்வனவுக்கு எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டமை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 ஒப்பந்த நிர்வாகம்

### 4.2.1 வீதி புனரமைப்புக்கள் மற்றும் முன்னேற்றங்கள்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) வீதிகளினை அகலமாக்குதல் மற்றும் முன்னேற்றுதல்

(i) 2016 ஆம் ஆண்டிற்கான வீதிகளினை அகலமாக்குதல் மற்றும் முன்னேற்றுதல்களுக்கான அரச ஏற்பாடுகள் ரூபா 8,065 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த ஏற்பாடுகளில், மீளாய்வாண்டின் போது ரூபா 4,637.6 மில்லியன் தொகையொன்று பெறப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செலுத்தவேண்டிய பட்டியல்கள் உள்ளடங்கலாக 2016 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்ட வேலைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பெறுமதி ரூபா 6,378.2 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான பங்களிக்கப்பட்ட தொகையினை மிகைத்து ரூபா 1,740.6 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) அதிகாரசபையின் (ஆர்டீஏ அல்லாத வீதிகள்) வரம்பின் கீழ் வராத 6,577.11 பெறுமதியுடைய வீதிகளின் உலோக மற்றும் தாரிடலுக்கான 1,081 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2016 ஆம் ஆண்டின் போது இது தொடர்பில் ரூபா 331.87 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) அதற்கு மேலதிகமாக, 2016 ஆம் ஆண்டின் போது ஆர்டீஏ அல்லாத வீதிகளினை அகலமாக்குதல் மற்றும் முன்னேற்றத்திற்கு ரூபா 1,868 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆர்டீஏ வீதிகளினை அகலமாக்கல் மற்றும் முன்னேற்றத்திற்கு பெறப்பட்ட ஏற்பாடுகள் அரச நிதியினைப் பயன்படுத்துவதற்கு பொதுத்திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது இந்த செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டங்களின் ஆரம்பிப்பிற்கு முன்னர் பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) உள்ளுர் வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் (எல்பீஎவ்பி)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாடுபூராவும் 1,433.85 கிலோ மீற்றர் நீளமான 64 முன்னுரிமை வீதிகளை புனரமைப்பதற்கு உள்ளுர் வங்கிகளிடமிருந்து ரூபா 152 பில்லியன் தொகையான கடன்களை பெறுவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 64 வீதிகள் புனரமைப்பதற்கு ரூபா 152 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது.

அதிகாரசபை 2012 - 2016 வரையான காலத்தில் 07 உள்ளுர் வங்கிகளிடமிருந்து ரூபா 143,513 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்களை பெற்றிருந்தது. அதில் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 13,583 மில்லியன் தீர்ப்பனவுசெய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் செலுத்தவேண்டிய பகுதி ரூபா 129,930 மில்லியன் என அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான பெறப்பட்ட கடன்கள் மற்றும் நிலுவையாகவுள்ள கடன் பகுதி என்பவற்றின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அனைத்து தொகைகளும் ரூபா மில்லியனில்

| வங்கியின் பெயர் | பெறப்பட்ட கடன்கள் | | மொத்தம் | மூலதன மீள்செலுத்துகைகள் | | மொத்தம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | 2015 வரை | 2016 | | 2015 | 2016 ஆம் ஆண்டின் போது | | |
| கொமர்ஸியல் வங்கி பிஎல்சி | 6,044 | 857 | 6,901 | 489 | 392 | 881 | 6,020 |
| இலங்கை வங்கி | 30,348 | 3,572 | 33,920 | 1,687 | 2,465 | 4,152 | 29,768 |
| மக்கள் வங்கி | 13,971 | 314 | 14,285 | 1,827 | 1,218 | 3,045 | 11,240 |
| தேசிய சேமிப்பு வங்கி | 54,344 | 441 | 54,785 | 339 | 2,710 | 3,049 | 51,736 |
| அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 1,210* | 82 | 1,292 | 45 | 108 | 153 | 1,139 |
| ஹட்டன் நெசனல் வங்கி | 19,541 | 5,169 | 24,710 | 136 | 1,879 | 2,015 | 22,695 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 5,983 | 1,637 | 7,620 | - | 288 | 288 | 7,332 |
| **மொத்தம்** | **131,441** | **12,072** | **143,513** | **4,523** | **9,060** | **13,583** | **129,930** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதிகளின் புனர்நிர்மாணத்திற்கான ஒப்பந்ததாரர்களின் தெரிவு அரச பெறுகை வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு வீதிகளுக்குமான இறுதி ஒப்பந்த விலை விசேட அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவொன்றினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்ததாரர்களினால் நிதிசார் முன்மொழிவுகள் பொருத்தமான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், நெடுஞ்சாலை பட்டியல் விகிதங்களுடன் ஒப்பந்ததாரர்களின் நிதிசார் முன்மொழிவுகளிலுள்ள விகிதங்களின் இணக்கம் 50 சதவீதம் தொடக்கம் 334 சதவீதம் வரையான வீச்சில் ஒப்பந்ததாரர்களின் விகிதங்கள் அதிகரித்தமை வெளிப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஒப்பந்த விகிதங்களில் கனியவியல் வித்தியாசங்கள் கூட அவதானிக்கப்பட்டன.

(ii) இந்த செயற்திட்டம் தொடர்பில் 64 வீதிகளில் 28 வீதிகளின் நிர்மாணத்திற்கு தேசிய சேமிப்பு வங்கியுடன் இணங்கப்பட்ட கடன்கள் ரூபா 55,392 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட கடன்களில் ரூபா 21,239 மில்லியன் தொகையொன்று இந்த நோக்கங்களுக்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 34,153 மில்லியன் மேலதிக தொகையொன்று கடன்களிலிருந்து பெறப்படல் வேண்டும். அவற்றில் ரூபா 28,000 மில்லியன் தொகையொன்று கடன் உடன்படிக்கைக்கு முரணாக ஏனைய செயற்பாடுகளின் பயன்பாட்டிற்கு 2014 திசெம்பர் வரை பெறப்பட்டுக் காணப்பட்டது. ஆகையினால், ரூபா 6,153.34 மில்லியன் தொகையொன்று மாத்திரம் வீதி நிர்மாணங்களுடன் தொடர்புடைய வேலைகளுக்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டு காணப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டவாறு கடன் உடன்படிக்கைக்கு முரணாக பெறப்பட்ட ரூபா 28,000 மில்லியன் தொகை முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் காணப்பட்ட அதிகாரசபையின் வீதி நிர்மாண வேலைகள், மற்றும் வெளிநாட்டு நிதிகளிலிருந்து அமுல்படுத்தப்பட்ட ஏனைய செயற்திட்டங்கள், நிர்வாக செலவினங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்விளைவொன்றாக, அந்த வீதிகளின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் அடையமுடியாது காணப்பட்டது. மேலும், 06 செயற்திட்டங்களின் வேலைகள் 2017 செப்தெம்பர் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 28,000 மில்லியன் மேலதிக செலவினத்தை மேவுகை செய்யும் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ரூபா 5,400 மில்லியன், ரூபா 6,250 மில்லியன், ரூபா 2,300 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 13,950 கூட்டுத்தொகையான தொகையொன்று முறையே 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டது. அதேவேளை, 2017 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளுக்கான நடுத்தரகால பாதீட்டு காலச்சட்டத்திலிருந்து ரூபா 14,050 மில்லியன் மீதி தொகையினை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தினை அளித்திருந்தது. எவ்வாறாயினும், நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட வீதிகளின் நிர்மாண செயற்பாடுகள் வீதிகளின் நீளம் மற்றும் அகலம், கொங்கிறீட் வடிகால்கள், மதகுகள், பக்கச் சுவர் மற்றும் வீதி மேற்பரப்பின் மீதான நிர்மாணம் போன்ற சில வேலை வகைகளினை குறைப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) திருகோணமலை வெளிச்சுற்றுவட்ட வீதியின் பூர்த்தியாக்கல்**

ஐக்கிய இராச்சியத்தின் உருக்கு பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,495 மில்லியன் தொகை செலவழித்து மட்டக்களப்பு – திருக்கொண்டை ஆறு - திருகோணமலை (ஏ-15) மற்றும் நகரத்திற்கு அப்பாலுள்ள அம்பேபுஸ்ஸ – குருநாகல் - திருகோணமலை (ஏ-6) என்பவற்றை இணைக்கின்ற திருகோணமலையிலுள்ள வெளிச்சுற்று வட்ட வீதிகளின் எட்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிதிகளின் பற்றாக்குறை காரணமாக பாலங்களை இணைக்கின்ற வீதிகளின் நிர்மாணம் 6 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2.2 கதிர்காமம் சுற்றுலாவிடுதியின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கதிர்காமத்திலுள்ள சுற்றுலா விடுதியின் நிர்மாணம் 2004 ஆம் ஆண்டில் மகநெகுமயினால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து அதிகாரசபையினால் ஒப்பந்ததாரர்க்கு செலுத்துகைகளினை மேற்கொள்வதற்கு இயலாமை காரணமாக கைவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர், நிர்மாண வேலைகள் நேர் ஊழியத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தரைத்தளத்தின் சுவர் மட்டம் வரை வேலைகளினை பூர்த்தியாக்குவதற்கு முடியுமாக காணப்பட்டது. அதன் பின்னர், கட்டிடத்தின் தரைத்தளத்தின் நிர்மாணம் ரூபா 12,352,242 பெறுமதிக்கு 2010 செப்தெம்பர் 28 இல் மற்றுமொரு ஒப்பந்ததாரர்க்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அதில், 2014 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்ததாரர்க்கு ரூபா 11,771,448 செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், வேலைகள் 2011 யூன் 07 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அது 2017 யூன் வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடத்தின் பூர்த்தியாக்கப்பட்ட பகுதியில் கணிசமான குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், நிர்மாண தோல்விகளினை கருத்திற் கொண்டிராது 2014 திசெம்பர் 24 இல் ரூபா 7,922,316 தொகையொன்றிற்கு அதே ஒப்பந்ததாரர்க்கு முதலாவது தரையின் நிர்மாண வேலைகள்கூட அளிக்கப்பட்டிருந்தது.

(இ) நேரடி ஊழியத்தினைப் பயன்படுத்தி மிகுதி வேலைகளினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் செலுத்தவேண்டிய பிடிகாசினைப் பயன்படுத்துவதன் மூலம் கட்டிடத்தின் குறைபாடுகளினை திருத்துவதற்கு அல்லது முன்னைய ஒப்பந்ததாரரிடமிருந்து கலைத்தலுக்கான சேதங்கள் அறவிடப்படுமென அதிகாரசபை எனக்கு அறிவித்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 12.7 மில்லியன் தொகையொன்றிற்கு மற்றுமொரு ஒப்பந்ததாரர்க்கு நிர்மாண வேலைகள் கொடைமுனைவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2.3 மெத்கம - ஹல்பொல பாலத்தின் நிர்மாணம்

பூன்டுலு ஓயாவிற்கு மேலாக மெத்கம மற்றும் ஹல்பொல பாலத்தின் நிர்மாணம் அதிகாரசபையின் யூகே இரும்பு பாலங்கள் செயற்திட்டம் கட்டம் I இன் கீழ் ரூபா 175.89 மில்லியன் தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் 2011 ஆகஸ்ட் இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்தப் பாலம் ஆர்டீஏ அல்லாத வீதியொன்றின் மேலாக அமைந்துள்ளதுடன் அதன் விளைவொன்றாக, அதிகாரசபை தொடர்புடைய நிறுவகத்திற்கு இந்தப் பாலத்தினை கையளிப்பதற்கு தவறியிருந்தது. மேலும், வீதிக்கு மேலாக வாகனங்களினை ஓட்டுவதற்கு புடலு ஓயாவிற்கு மேலாக அதிகுறைந்தது இரண்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டியதுடன் இது உப நீர்வழியாகக் காணப்படுகின்றது. பிரதான நீர் வழியின் மேலாக ஒரு பாலம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டுக் காணப்பட்டதிலிருந்து, மோட்டார் வாகனங்கள் வீதியினூடாக ஓடமுடியாது காணப்பட்டதுடன் அதன்விளைவொன்றாக, பாலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடு பயனற்ற செலவினமொன்றாக மாறியது.

### 4.2.4 மாபெறித்தென்ன வான்வழியின் நிர்மாண வேலைகள்

அதிகாரசபையின் நேரடி ஊழியர்களினைப் பயன்படுத்துவதன் மூலம் திகன்ன விக்டோரியா மீதான உள்ளக வான்வழியொன்றை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது.

இந்த வேலைக்கு பொறியியலாளரின் மதிப்பீடு ரூபா 2,254.26 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் வான்வழியின் நீளம் மற்றும் அகலம் முறையே 1,200 மீற்றர்கள் மற்றும் 100 மீற்றர்களாகக் காணப்பட்டது. நிர்மாண வேலைகள் 2013 ஆகஸ்ட் 04 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், காணிக் கொள்வனவு செயற்பாடுகள் பூர்த்தியடைந்ததன் பின்னர்கூட உள்ளூர் நிதிகளினூடாக ரூபா 172.60 மில்லியன் ஏற்பட்ட பின்னர் 2015 சனவரி 26 அளவில் வேலைகள் கைவிடப்பட்டிருந்தது. அத்துடன், அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவினூடாக இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நிர்மாணத்திற்கு முன்னர் பெறப்படவேண்டுமென வேண்டப்படும் சுற்றுச்சூழல் மீதான தாக்க மதிப்பீட்டு சான்றுப்பத்திரம் பெறப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிதாகக் நிர்மாணிக்கப்பட்ட தலைமை அலுவலகக் கட்டிடத்தின் அலுவலக செயற்பாடுகள் 2015 ஏப்ரல் இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 108.2 மில்லியன் பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் (தளபாடமும் உபகரணமும்) செயற்திட்டத்தினால் 2017 ஆகஸ்ட் 31 வரையிலும் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 29,820,700 பெறுமதியுடைய பயன்படுத்தப்படாத மற்றும் தாமதமான நகர்வினையுடைய உதிரிப்பாகங்கள் இருப்பு பயன்படுத்தப்பட்டிராது 2012 ஆம் ஆண்டிலிருந்து களஞ்சியங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(இ) ரூபா 4,856,427 ஆன பெறுமதியுடைய சீருடைகள், பாதணிகள், மற்றும் செருப்புக்கள், டயர்கள் மற்றும் மூலப்பொருள் இருப்பு - அஸ்பால்ட் (Asphalt) பொறி போன்ற வழக்கற்றுப்போன இருப்பு வகைகளினை அகற்றுவதற்கு கருத்திற்கொண்டிராது 2008 ஆம் ஆண்டிலிருந்து களஞ்சியங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

(ஈ) வரையறுக்கப்பட்ட எமியுல்சன் உற்பத்திக் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இரண்டு பங்குகளினை உள்ளடக்கிய ரூபா 200 மில்லியன் தொகையான கூறப்பட்ட மூலதனம் தனியானதொரு பங்குதாரர் மற்றும் அதிகாரசபையிடம் காணப்படுகின்றது. மேலும், ரூபா 222.33 மில்லியன் பெறுமதியுடைய வாகனங்கள், பொறி, இயந்திரம் மற்றும் உபகரணம் 2004 ஆம் ஆண்டில் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கம்பனியொன்றிற்கு அதிகாரசபையினால் கையளிக்கப்பட்டிருந்தது. 2004 தொடக்கம் 2012 சனவரி வரையான காலப்பகுதியுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபை மற்றும் கம்பனி இது தொடர்பில் 2012 பெப்ரவரி 10 இல் குத்தகை உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், 2017 ஒக்தோபர் 31 வரையிலும் சொத்துக்களினை மீள்பெறுமதியிடுவதற்கு மற்றும் அவற்றிற்கான வாடகைகளினை மீளமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகளினால் செயல்படுத்தப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையில் காணப்பட்டன. அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) மகநெகும கம்பனிகள்

2004 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது அதிகாரசபையினால் மகநெகும வீதி நிர்மாணம் மற்றும் உபகரண கம்பனிக்கு அளிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் வாடகை மற்றும் சொத்துக்கள், நகரத்தக்கவைகள் மற்றும் உதிரிப்பாகங்களின் பயன்பாடு தொடர்பில் முறையே ரூபா 222,391,330 ரூபா 63,276,545 தொகையான வாடகை நிலுவைகள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளினை அறவிடுவதற்கு 2017 யூலை 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், முன்கலவையின் (Premix) கொள்வனவுக்கு 2013 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது மேற்குறித்த கம்பனிக்கு அளிக்கப்பட்ட ரூபா 15,877,592 தொகையான முற்பணங்களினை அறவிடுவதற்கு 2017 யூலை 31 வரையிலும் விடுபட்டுக் காணப்பட்டது.

### (ஆ) துணைக்கம்பனிகளுக்கு அளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள்

2008 தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது மகநெகும வீதி நிர்மாணம் மற்றும் உபகரணக் கம்பனிக்கு (எம்ஆர்சீஈசீ) ரூபா 56,771.59 மில்லியன் பெறுமதியான 2,773 வீதி நிர்மாண ஒப்பந்தங்களும் 2008 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதியின் போது மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ கம்பனிக்கு (எம்சீபிஎம்சீ) ரூபா 3,460 மில்லியனுக்கு 109 வீதி நிர்மாண ஒப்பந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த விலை மொத்த கிரய மதிப்பீட்டிற்கு 28 சதவீத இலாப எல்லையினை சேர்ப்பதன் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகை வழிகாட்டல்களினை பின்பற்றியிராது, அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டிராது, 2008 ஆகஸ்ட் 01 இல் வழங்கப்பட்ட பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்குறித்த திருத்தங்கள் அளிக்கப்பட்டிருந்தது.

(ii) அதிகாரசபை தலைவரின் 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 1109/2008 ஆம் இலக்க சபைப் பத்திரத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், வெளித்தரப்பினர்க்கு உபஒப்பந்தங்கள் அளிக்கப்படக்கூடாது. எவ்வாறாயினும், எம்ஆர்சீசீயிற்கு அளிக்கப்பட்ட 2,773 ஒப்பந்தங்களில், 2,521 ஒப்பந்தங்கள் ரூபா 48,981 மில்லியனை செலுத்துவதன் மூலம் உபஒப்பந்தங்களினூடாக செயற்படுத்தப்படுகின்றது. மேலும், எம்சீபிஎம்எஸ்சியிற்கு அளிக்கப்பட்ட அனைத்து 109 ஒப்பந்ததாரர்கள் ரூபா 3,460 மில்லியனை செலுத்துவதன் மூலம் உபஒப்பந்தங்களினூடாக செயற்படுத்தப்படுகின்றது.

## 4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) பதவியணியினர்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 யூன் 30 இல் உள்ளவாறான அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம், 99 பதவிகளில் 746 வெற்றிடங்களுடன் 14 ஏனைய பதவிகளில் 1446 மிகைகளும் காணப்பட்டன.

(ii) சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 06 வெற்றிடங்களும், தொழில்நுட்ப சேவைகளில் 156 வெற்றிடங்களும், எழுதுவினைஞர் மற்றும் கூட்டணி சேவைகளில் 33 வெற்றிடங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. இந்த நிலைமை அதிகாரசபையின் செயலாற்றலினை மோசமாக பாதித்துள்ளது.

### (ஆ) ஏனைய நிறுவனங்களுக்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்ட அதிகாரசபையின் வளங்கல்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய அமைச்சு அல்லது ஏதாவது வேறு அரசாங்க நிறுவனங்கள் சார்பில் ஏதாவது சந்தர்ப்பங்களின் கீழ் செலவினம் செய்வதற்கு அல்லது அதன் வளங்களை (மனித வளம் உள்ளடங்கலாக) ஈடுபடுத்தல் என்பவற்றிற்கு பொது முயற்சிகள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதனை மீறி, அதிகாரசபை அதன் 47 பதவியணி உறுப்பினர்களை உயர்கல்வி அமைச்சிற்கு விடுவித்திருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த பதவியணி உறுப்பினர்கள் சார்பில் செலுத்தப்பட்ட ரூபா 40,594,078 தொகையான சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகளினை மீளஅறவிடுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பெறுகைகள் பிரிவின் செயலாற்றல்

முறையான மற்றும் வினைத்திறனான முறையில் அதிகாரசபையின் பெறுகை செயற்பாடுகளினை மேற்கொள்ளும் நோக்குடன் பெறுகைகள் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீதிகளின் விரிவாக்கல் மற்றும் முன்னேற்றம், பாலங்களின் நிர்மாணம் மற்றும் வீதிகளின் பேணுகையுடன் தொடர்புடைய அதிக முக்கியத்துவம்வாய்ந்த பெறுகை செயற்பாடுகள் அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையினால், அதிகாரசபையின் பெறுகைகள் பிரிவு அதிகாரசபையின் முக்கியத்துவமற்ற அலகொன்றாக மாறியது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய ''நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்களின்'' பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள் ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், 2016 தொடக்கம் 2020 வரையான ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2016 பெப்ரவரி 29 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2017 தொடக்கம் 2021 வரையான ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் 2017 நவம்பர் 30 இல் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு பிரிவினதும் வேண்டப்பட்ட ஆளணியை கூட்டிணைந்த திட்டம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இருப்பினும், உண்மையான தேவையினை மதிப்பீடு செய்தபின்னர் மனித வளத் தேவைப்பாட்டு விபரங்கள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்காய்வுகளின் கீழ் மாகாண பணிப்பாளர் அலுவலகங்கள், பிரதம பொறியியலாளர்கள் (சீஈ) அலுவலகங்கள் மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களில் கணக்காய்வினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மேலும், கள கணக்காய்வுகளின் கீழ் சீஈ மாவட்டங்கள், நிலக்கீழ் / நொறுக்கி / முன்உருக்கொட்டு பொறிகள், சீஈ செயற்திட்டங்கள், உள்ளுர் வங்கி நிதியளிக்கப்பட்ட வீதி செயற்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணி கொள்வனவு, முறைமை கணக்காய்வுகள் மற்றும் அதிகாரசபை உரிமையைக் கொண்டுள்ள மகநெகும கம்பனிகளின் கணக்காய்வு, அதிவேக போக்குவரத்து கம்பனி மற்றும் செயற்திட்ட நிர்மாணங்களின் தொழில்நுட்ப கணக்காய்வுகள் போன்ற அதிகமான இடரினையுடைய பரப்புக்கள் உள்ளகக் கணக்காய்வினால் மேவுகைசெய்யப்பட்டிருக்கவில்லை.

உள்ளகக் கணக்காய்வு பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 17 மற்றும் 12 எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 02 உள்ளகக் கணக்காய்வாளர்கள், 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் 03 கணக்காய்வு உதவியாளர்களுக்கான வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. இந்த நிலைமை உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளின் வினைத்திறனினை பாதித்திருந்தது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2016 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2016 ஆகஸ்ட் இல் திருத்தப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட பாதீட்டிற்கான அங்கீகாரம் 2016 திசெம்பர் 21 இல் பெறப்பட்டிருந்ததுடன் காத்திரமும் பயனுறுதியும் மிக்க பாதீட்டு முறைமையொன்றின் பற்றாக்குறை காரணமாக அதிகாரசபையின் திருத்தப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகையால், பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் வினைத்திறன்வாய்ந்த கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5.4 பொது முயற்சிகள் குழு மற்றும் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களினை அமுல்படுத்தாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி 14 இல் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பங்குகளின் பெரும்பான்மையினை பொதுத் திறைசேரி கொண்டிருக்கும் அதேவேளை மிகுதியினை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கொண்டிருக்ககூடியதாக மூன்று மகநெகும கம்பனிகளின் அமைப்பு அகவிதியினை திருத்தியமைப்பதற்கு வழிகாட்டப்பட்டது. எவ்வாறாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த தீர்மானம் இன்றைய திகதி வரை பொறுப்புடைய அமைச்சுக்களினால் கூட அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறித்த தீர்மானத்திற்கு மேலதிகமாக, அந்தக் கம்பனிகள் தொடர்பில் 2016 ஆகஸ்ட் 10 இல் பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட பின்வரும் வழிகாட்டல்கள் கூட 2017 நவம்பர் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) அதிகாரசபை மீது மகநெகும வீதி நிர்மாண உபகரண கம்பனி மற்றும் எமியுல்சன் உற்பத்தி கம்பனியின் உரிமைத்துவத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

(ii) மகநெகும எமியுல்சன் உற்பத்தி கம்பனி மற்றும் மகநெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் கம்பனி ஒவ்வொன்றிலும் 2004 யூன் 05 இல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,000,000 வைப்புக்களுக்கு பங்கு சான்றிதழ்களினைப் பெற்றுக்கொள்ளல். 2017 நவம்பர் வரையிலும் தொடர்புடைய பங்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்காத போதிலும், இது தொடர்பில் அமைச்சிலோ அல்லது அதிகாரசபையினாலோ சட்ட நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஒப்பந்த செயற்பாடுகளினை வழங்குவதற்கு அதிகாரசபை உரிமையைக் கொண்டுள்ள சொத்துக்களினை பயன்படுத்த கம்பனிகளினை அனுமதிக்கும் அதேவேளை அதிகாரசபைக்கு 28 சதவீத நட்டத்தினை கம்பனிகளுக்கு ஏற்படுத்துவதற்கு ஒப்பந்தங்களினை அளிப்பது தொடர்பில் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் தீர்மானமொன்றை எடுத்தல்.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கீட்டுக் கொள்கைகளினை வெளிப்படுத்துவதில் குறைபாடுகள் மற்றும் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் வகைப்படுத்தல் பிழைகள். |
| | (ii) தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை. (மகநெகும கம்பனிகள் மற்றும் அதிவேகப் பாதை போக்குவரத்து கம்பனிகளுடனான கொடுக்கல் வாங்கல்கள்) |

| | | |
|---|---|---|
| | | (iii) மாற்றஞ்செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பரிகாரங்கள் மற்றும் அறிக்கைத் திகதியிலுள்ள மீதிகளுக்காக தயாரிக்கப்பட்ட விபரமான பட்டியல்களில் பிழைகள். |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) குறித்த நோக்கங்களிற்காக நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துதல், நிதிப் முன்மொழிவுகளினை மதிப்பாய்வு செய்தல், வேலைக் கட்டளைகளிற்காக முன் அங்கீகாரம் பெறுதல், பட்டியலிடப்பட்டவாறு நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துதல் போன்ற ஒப்பந்த நிர்வாகத்தில் பலவீனங்கள்.<br>(ii) குறித்த நோக்கங்களிற்காக நிதிகளினைப் பயன்படுத்தாமை. |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | வழக்கற்றுப்போன இருப்பு வகைகளினை அகற்றுதல். |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | செயற்திட்ட முகாமைத்துவ அலகுகளிலிருந்து அதிகாரசபைக்கு சொத்துக்களினை கையளிக்கும் நடைமுறைகள் தொடர்பில் பலவீனங்கள் வெளிப்படுத்தப்பட்டமை. |
| (உ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | (i) ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயுர்வுகளுக்கான திட்டத்திற்கு அங்கீகாரம் காணப்படாமை.<br>(ii) ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் நடைமுறையில் பிரச்சினைகள். |
| (ஊ) | நிதிகளின் பயன்பாடு | பெறப்பட்ட ஏற்பாட்டிற்கப்பால் செலவழிக்கின்றமை மற்றும் தாழ்ந்த பாதீட்டுக் கட்டுப்பாடு. |
| (எ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள நோக்கெல்லைக்கு அப்பாலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதி நிர்மாண வேலைகளல்லாதவற்றை கையேற்றல். |
| (ஏ) | செயற்திட்ட முகாமைத்துவம் | (i) செயற்திட்டங்களின் பூர்த்தியாக்கலில் தாமதம்.<br>(ii) ஏனைய செயற்பாடுகளுக்கான நிதிகளின் பயன்படுத்துகை.<br>(iii) திட்டமிடப்பட்ட செயற்பாடுகளினை கால சட்டகத்திற்குள் மேற்கொள்ளத் தவறியமை. |